# February 12, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவு நாடான மடகாஸ்கரில், டோமசினா எனும் துறைமுக நகருக்கு அருகே கடந்த இரவு கரையைக் கடந்த 'கெஸானி' தீவிர புயலின் பாதிப்பில் 20 பேர் உயிரிழந்தனர்.

(i) நாட்டின் அதிபர் மைக்கேல் ராண்ட்ரியானிரினா, பாதிக்கப்பட்ட டோமசினா பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தினார்.

2.அண்டை நாடான வங்கதேசத்தில் 13-ஆவது நாடாளுமன்றத் தேர்தலின் வாக்குப்பதிவு வியாழக்கிழமை (பிப். 12) நடைபெறுகிறது.

(i) முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் 15 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்து, முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்ற 18 மாதங்களுக்குப் பிறகு இத்தேர்தல் நடத்தப்படுகிறது.

(ii) கடந்த 2024, ஆகஸ்டில் மாணவர் போராட்டங்கள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, ஷேக் ஹசீனா தனது பதவியை ராஜிநாமா செய்து விட்டு, இந்தியாவில் தஞ்சமடைந்தார். போராட்டங்களை ஒடுக்க வன்முறையைப் பயன்படுத்தியதாக அவர் மீது வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், அவரது அவாமி லீக் கட்சிக்கு இத்தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

(iii) இதன் காரணமாக, முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தலைமையிலான வங்கதேச தேசிய வாதக் கட்சி (பிஎன்பி) மற்றும் அதன் முன்னாள் கூட்டாளியான ஜமாத்-ஏ-இஸ்லாமி ஆகிய கட்சிகளுக்கு இடையே நேரடிப் போட்டி நிலவுகிறது.

(iv) நாடாளுமன்றத்தின் 300 இடங்களுக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

(v) ஜூலை சாசனம் மீது பொது வாக்கெடுப்பு :-

- நாடாளுமன்றத் தேர்தலுடன், 84 அம்ச ஜனநாயக சீர்திருத்தங்களை உள்ளடக்கிய 'ஜூலை தேசிய சாசனம் 2025' மீதான மக்கள் வாக்கெடுப்பும் நடைபெறுகிறது.
- ஒருவர் அதிகபட்சமாக 10 ஆண்டுகள் மட்டுமே பிரதமராக இருக்க முடியும்; அதிகாரக் குவிப்பைத் தவிர்க்க, கட்சித் தலைவரே பிரதமராகவும் இருப்பதைத் தடுத்தல்; தேர்தல் ஆணையம் மற்றும் நீதிமன்றங்களின் தன்னாட்சியை உறுதி செய்தல்; சட்டங்களை ஆய்வு செய்ய நாடாளுமன்றத்தில் புதிதாக மேலவையை உருவாக்குதல்; 2024 போராட்டங்களில் பங்கேற்ற மாணவர்களுக்கு வருங்கால அரசுகளால் பாதிப்பு ஏற்படாத வகையில் சட்டப்பாதுகாப்பு அளித்தல் போன்ற முக்கிய சீர்திருத்தங்கள் இந்தச் சாசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

3.இந்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா வரும் ஏப்ரல் வரை தென்னாப்பிரிக்காவில் பயிற்சி பெறவும், டேக்வாண்டோ மற்றும் கராத்தே சர்வதேச போட்டியாளர்கள் அளவில் பயிற்சி பெறவும் மத்திய விளையாட்டு அமைச்சகத்தின் ஒலிம்பிக் திட்டக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

4. விண்வெளிக்கு மனிதரை அனுப்பும் 'ககன்யான்' திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லா தெரிவித்தார்.

(i) விண்வெளிக்கு மனிதரை அனுப்பும் 'ககன்யான்' திட்டத்தை செயல்படுத்த இந்தியா முடிவு செய்துள்ளது. மூன்று பேர் அடங்கிய விண்வெளி வீரர்களின் குழுவை விண்ணுக்கு அனுப்பி, 3 நாள்கள் கழித்து, பாதுகாப்பாக பூமிக்கு அழைத்து வரும் இத்திட்டத்தை 2027-ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டம் வகுத்து, அதற்கேற்ப முன்னேற்பாடுகளை இஸ்ரோ செய்துவருகிறது.

(ii) இந்த நிலையில், பெங்களூரில் நடைபெற்ற இந்திய- அமெரிக்க விண்வெளி வர்த்தக அமைப்பின் கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்தபோது, 'ககன்யான்' தொடர்பாக செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்து, 'சுகன்யான்' திட்டத்தின் குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லா கூறியதாவது:

(iii) 'ககன்யான்' திட்டத்தைப்போல, விண்ணுக்கு மனிதனை அனுப்பியுள்ள உலக நாடுகள் மூன்று தான். இத்திட்டம் மிகவும் சிக்கலானது மற்றும் சவால்கள் நிறைந்தது. எனினும், துணிச்சலாக இந்தத் திட்டத்தை செயல்படுத்த இந்தியா முனைந்துள்ளது.

5. செறிவூட்டப்பட்ட அரிசி திட்டத்தில் எந்தப் பிரச்னையும் இல்லை என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

(i) இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 ஒன்றுசேர்க்கப்பட்ட அரிசி மாவில் செய்யப்படும் செறிவூட்டப்பட்ட அரிசி தானியங்கள் மூலம், 1-க்கு 100 என்ற விகிதத்தில் வழக்கமான அரிசியுடன் செறிவூட்டப்பட்ட அரிசி கலக்கப்படுகிறது.

(ii) இந்நிலையில், ரத்த சோகை போன்ற நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை களைவதற்கு பொது விநியோகத் திட்டம் மூலம் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

(iii) தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம், பிரதமரின் போஷான் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ், நாடு முழுவதும் படிப்படியாக அந்த அரிசி விநியோகத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

(iv) இந்தத் திட்டம் தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய உணவு பாதுகாப்புத் துறை இணையமைச்சர் நிமுபென் ஜயதிபாய் பம்பானியா எழுத்துபூர்வமாக அளித்த பதில்: செறிவூட்டப்பட்ட அரிசி திட்டத்தில் எந்தப் பிரச்னையும் இல்லை. செறிவூட்டப்பட்ட அரிசி, செறிவூட்டப்பட்ட அரிசி தானியம், வைட்டமின்-கனிம கலவைக்கான தரநிலைகளை இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் அறிவித்துள்ளது என்றார்.

6.இந்தியா-அமெரிக்கா இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் மூலம், அமெரிக்க ஏற்றுமதிக்கு இந்தியாவில் வரி குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும் பொருள்களின் பட்டியலில் இருந்து பருப்பு வகைகளை அந்நாட்டு அரசு நீக்கியுள்ளது.

7.அதிக ஈரப்பதம் கொண்ட நெல்லை கொள்முதல் செய்வது குறிப்பிடத்தக்க சேமிப்பு அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று கூறி, நெல்லுக்கான ஈரப்பத விதிமுறைகளை தளர்த்த வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துள்ளது. இது தொடர்பாக மக்களவையில் உறுப்பினர் எழுப்பிய கேள்விகளுக்கு மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை இணையமைச்சர் நிமுபென் ஜெயந்திபாய் பம்பானியா அளித்துள்ள எழுத்துபூர்வ பதில் வருமாறு:

(i) நெல்லுக்கான ஈரப்பத விதிமுறைகளை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக தளர்த்த வேண்டும் என்று தமிழக அரசு கோரியிருந்தது. இருப்பினும், தமிழக அரசின் கோரிக்கை பின்வரும் காரணமாக பரிசீலிக்கப்படவில்லை.

- நெல் அரைப்பதற்கு முன் உலர்த்த முடியும். அதிகப்படியான ஈரப் பதமான நெல் கொள்முதல் சேமிப்பின் போது இருப்பு இழப்பு மற்றும் அரைக்கும் போது மீட்பு பாதிக்கப்படுவது உள்ளிட்ட குறிப்பிடத்தக்க செயல்பாட்டு ஆபத்தை ஏற்படுத்துகிறது. அதிக ஈரப்பதம் கொண்ட நெல் விரைவான சிதைவு, பூஞ்சை வளர்ச்சி, நிறமாற்றம் மற்றும் தொற்று ஆகியவற்றின் அடிப்படையில் எளிதில் பாதிக்கப்படுகிறது. கொள்முதல் நிலைகளில் வடிகால் வசதிகளை உருவாக்க மாநில அரசுகளுக்கு பலமுறை அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.
- ஈரப்பதத்தில் தளர்வு விவசாயிகள் மீது நேரடி நிதி தாக்கத்தை ஏற்படுத்தாது. எனவே, அத்தகைய தளர்வு இனி பரிசீலிக்கப்படாது. 2025-26 பயிர் ஆண்டின் (ஜூலை-ஜூன்) காரீப் பருவத்திலிருந்து நெல் கொள்முதல் இலக்கை அரிசி அடிப்படையில் 16 லட்சம் டன்னாக மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.
- செறிவூட்டப்பட்ட அரிசி தானியங்களை (எஃப்ஆர்கே) மாதிரியாக எடுப்பதற்கான விதிமுறைகளை

தளர்த்துவது தொடர்பாக, செறிவூட்டப்பட்ட அரிசி தானியங்களின் (எஃப்ஆர்கே) மாதிரி அளவை 10 டன்னிலிருந்து 21 டன்னாகவும், பேக்கேஜிங் அளவை 25 கிலோவிலிருந்து 50 கிலோவாகவும் மத்திய அரசு திருத்தி அமைத்துள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

8.அரசு நிகழ்ச்சி மற்றும் பள்ளிகளில் தேசியப் பாடலான வந்தே மாதரம் கட்டாயம் பாடப்பட அல்லது ஒலிக்கப்பட வேண்டும்; வந்தே மாதரம் பாடலின் 6 சரணங்களையும் பாட ''வேண்டும்' என்று மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

(i) தேசிய கீதம் பாடப்படும் அனைத்து தருணங்களிலும் தேசியப் பாடலையும் பாட வேண்டும். தேசியப் பாடலை முதலில் பாட வேண்டும்' என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ii) வங்கக் கவிஞர் பங்கிம் சந்திர சட்டர்ஜி யால் இயற்றப்பட்ட வந்தேமாதரம் பாடலின் 6 சரணங்களில் இரு சரணங்களை மட்டும் தேசியப் பாடலாக கடந்த 1937-இல் காங்கிரஸ் தேர்வு செய்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தாரக மந்திரமாக விளங்கிய வந்தே மாதரம் பாடல், கடந்த 1875-இல் பங்கிம் சந்திர சட்டர்ஜியால் இயற்றப்பட்டது. 'வங்கதரிசனம்' இலக்கிய இதழில், சட்டர்ஜியின் 'ஆனந்தமடம்' நாவலின் ஒரு பகுதியாக இந்தப் பாடல் முதல் முறையாக வெளியானது.

(iii) கடந்த 1896-இல் கொல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் ரவீந்திரநாத் தாகூர் பாடிய பின்னர் வந்தே மாதரம் பாடல் பிரபலமடைந்தது.

(iv) 6 சரணங்கள் கொண்ட இந்தப் பாடலின் இரு சரணங்களை மட்டும் தேசியப் பாடலாக கடந்த 1937- இல் காங்கிரஸ் தேர்வு செய்தது. கடந்த 1950, ஜனவரி 24-இல் அரசியல் நிர்ணய சபையால் நாட்டின் தேசியப் பாடலாக முறைப்படி ஏற்கப்பட்டது. இப்பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறை வடைந்ததையொட்டி, ஓராண்டு கால கொண்டாட்டங்கள் கடந்த நவ. 7-இல் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

(v) நெறிமுறைகள் வெளியீடு:

- இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த ஜன. 28-இல் வெளியிட்ட உத்தரவில், வந்தே மாதரம் பாடலைப் பாடுவதற்கான முதல்கட்ட நெறிமுறைகள் இடம்பெற்றுள்ளன. அதன்படி, குடியரசுத் தலைவரின் வருகை, தேசியக் கொடி ஏற்றும் நிகழ்வு, மாநில ஆளுநர்களின் உரை போன்ற அரசு நிகழ்ச்சிகளின் போது 3 நிமிஷங்கள் 10 விநாடிகள் கொண்ட வந்தே மாதரம் பாடலின் 6 சரணங்களும் பாடப்பட அல்லது ஒலிக்கப் பட வேண்டும். தேசியப் பாடல் பாடப்படும்போது, அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும். தாய்மண்ணுக்கு மரியாதை செலுத்தும் இப்பாடலின்போது, உரிய கண்ணியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
- பள்ளிகள் செயல்படத் தொடங்கும் முன்பாக தேசியப் பாடல் ஒலிக்கப்பட வேண்டும். மாணவ-மாணவிகள் குழுவாக தேசியப் பாடலை பாடுவதுடன் பள்ளி செயல்பாடுகளைத் தொடங்கலாம். பள்ளி நிகழ்ச்சிகளில் தேசியப் பாடல், தேசிய கீதம் பாடுவதையும், தேசியக் கொடி மீதான மரியாதையை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- தேசியக் கொடியேற்றம், கலாசார நிகழ்ச்சிகள், அணிவகுப்பு அல்லாத பிற அரசு நிகழ்ச்சிகளின்போது தேசியப் பாடல் ஒலிக்கப்படுவதுடன், அனைவரும் குழுவாக பாடும் வகையில் ஒலி அமைப்புமுறை வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வந்தே மாதரம் பாடலின் அதிகாரபூர்வ வரிகள் அச்சிடப்பட்ட பிரசுரங்களையும் பங்கேற்பாளர்களுக்கு விநியோகிக்கலாம் என்று உள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாரதத் தாயை துர்கா தேவியாக உருவகப்படுத்துவதால், வந்தே மாதரம் பாடலின் பிற சரணங்களை உள்நோக் கத்துடன் விலக்கிவிட்டதாக காங்கிரஸ் மீது பாஜக குற்றஞ்சாட்டிய நிலையில், மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

9. மரண தண்டனை தொடர்பான தொடர்ச்சியான விவாதம்

(i) உலகளாவிய போக்குகள் மற்றும் பொதுக் கருத்து

- காலப் தரவுகளின்படி, அமெரிக்காவில் மரண தண்டனைக்கான ஆதரவு 2025 இல் 52% ஆகக் குறைந்துள்ளது, இது 1994 இல் 80% ஆக இருந்தது.
- அமெரிக்காவில் மரண தண்டனைக்கு எதிரான பொதுமக்களின் எதிர்ப்பு 44% ஆக உயர்ந்துள்ளது, இது 1995-இல் வெறும் 13% ஆக இருந்தது.
- தோராயமாக 145 நாடுகள் மரண தண்டனையை சட்டப்பூர்வமாக ஒழித்துள்ளன அல்லது நடைமுறையில் அதை செயல்படுத்துவதை நிறுத்திவிட்டன.

(ii) உலகளாவிய மரணதண்டனை புள்ளிவிவரங்கள் (2023)

- அம்னஸ்டி இன்டர்நேஷனலின் கூற்றுப்படி, 2023-இல் அதிக எண்ணிக்கையிலான மரணதண்டனைகள் ஈரானில் (853), அதைத் தொடர்ந்து சவுதி அரேபியாவில் (172) மற்றும் அமெரிக்காவில் (24) நிகழ்ந்தன.
- 2023-இல், சீனாவில் 1,000 க்கும் மேற்பட்டவர்களுக்கும், எகிப்தில் 590 பேருக்கும், பங்களாதேஷில் 248 பேருக்கும் மரண தண்டனைகள் வழங்கப்பட்டன.
- ஆப்கானிஸ்தான், வட கொரியா மற்றும் சிரியா போன்ற நாடுகளுக்கு நம்பகமான தரவு பெரும்பாலும் கிடைக்காது.

(iii) இந்திய சூழல்: விசாரணை நீதிமன்ற போக்குகள் (2016–2025)

- கடந்த பத்தாண்டுகளில் (2016–2025), இந்திய விசாரணை நீதிமன்றங்கள் 1,279 நபர்களுக்கு மரண தண்டனையை வழங்கியுள்ளன.
- டிசம்பர் 31, 2025 நிலவரப்படி, இந்தியாவில் தற்போது 574 பேர் (550 ஆண்கள் மற்றும் 24 பெண்கள்) மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளனர்.
- 2025 ஆம் ஆண்டில் மட்டும் 94 வழக்குகளில் விசாரணை நீதிமன்றங்கள் 128 மரண தண்டனைகளை விதித்தன.
- 2025 ஆம் ஆண்டில், உத்தரபிரதேசத்தில் (20) அதிகபட்சமாக மரண தண்டனைகள் வழங்கப்பட்டன, அதைத் தொடர்ந்து கர்நாடகா மற்றும் மேற்கு வங்கம் (தலா 6), மற்றும் தமிழ்நாட்டில் (5).

(iv) நீதித்துறை ஆய்வு மற்றும் உயர் நீதிமன்ற முடிவுகள்

- 2016 மற்றும் 2025-க்கு இடையில் உயர் நீதிமன்றங்களால் மதிப்பாய்வு செய்யப்பட்ட 842 மரண தண்டனை வழக்குகளில், 70 (8.3%) மட்டுமே உறுதிப்படுத்தப்பட்டன. சுமார் 258 நபர்கள் (30.64%) முழுமையாக விடுவிக்கப்பட்டனர்.
- தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக (2025 வரை), உச்ச நீதிமன்றம் ஒரு மரண தண்டனையை கூட உறுதி செய்யவில்லை.
- 2025 ஆம் ஆண்டில், மரண தண்டனை விதிக்கப்பட்ட 10 பேரின் தண்டனைகளை உச்ச நீதிமன்றம் குறைத்தது அல்லது ரத்து செய்தது. 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு மரண தண்டனை வழக்குகளில் இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையிலான விடுதலைகள் காணப்பட்டன.
- 2025 ஆம் ஆண்டில், சென்னை உயர் நீதிமன்றம் ஒரு மரண தண்டனையை மட்டுமே உறுதி செய்தது, அதே நேரத்தில் 8 பேருக்கான தண்டனைகளைக் குறைத்தது.

(v) சட்ட மற்றும் நெறிமுறை வாதங்கள்

- மரண தண்டனை ஆயுள் தண்டனையை விட குற்றங்களுக்கு எதிரான ஒரு பெரிய தடுப்பாக செயல்படுகிறது என்பதற்கு நம்பகமான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை குறிப்பிட்டுள்ளது.
- மரண தண்டனை வாழ்வதற்கான அடிப்படை உரிமையை மீறுவதாகவும் மனித கண்ணியத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

- நவீன நீதித்துறை தத்துவம், குற்றவாளிகள் தங்கள் உயிரைப் பறிப்பதை விட, தண்டனை அனுபவித்த பிறகு சீர்திருத்தம் செய்ய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.
- உலகளவில் குற்ற ஒழிப்பு நோக்கிய மாற்றம் இருந்தபோதிலும், "அரிதிலும் அரிதான" குற்றங்களுக்கு சமூக பயம் மற்றும் நீதி உணர்வைப் பேணுவதற்கு இறுதி தண்டனை தேவை என்று சிலர் இன்னும் வாதிடுகின்றனர்.

10. ஊடகங்களின் முன்னோடி

(i) வரலாற்று முக்கியத்துவம் மற்றும் தோற்றம்

- கண்டுபிடிப்பு: "ரேடியோவின் தந்தை" என்று பரவலாகக் கருதப்படும் இத்தாலியரான குக்லீல்மோ மார்கோனி 1895 மற்றும் 1896 க்கு இடையில் வானொலியைக் கண்டுபிடித்தார், அவர் நோபல் பரிசு பெற்றவர்.
- தொழில்நுட்ப முதன்மையானது: ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு தகவல்களை அனுப்ப மின்காந்த அலைகளைப் பயன்படுத்திய முதல் ஊடகம் வானொலி.
- சமூக அந்தஸ்து: முந்தைய நூற்றாண்டில், ஒரு வீட்டில் வானொலியை வைத்திருப்பது சமூக அந்தஸ்தின் அடையாளமாகக் கருதப்பட்டது.

(ii) ரேடியோவின் தனித்துவமான நன்மைகள்

- ரேடியோ காட்சி ஊடகங்களைப் போலல்லாமல், கண்கள் ஓய்வெடுக்க அனுமதிக்கும் "காதுகளுக்கு விருந்து" என்று விவரிக்கப்படுகிறது.
- தொலைக்காட்சியைப் போலல்லாமல், ரேடியோ சிக்னல்களுக்கு சந்தா கட்டணம் தேவையில்லை மற்றும் மிகவும் எடுத்துச் செல்லக்கூடியது, கேட்போர் அதை எங்கும் எடுத்துச் செல்ல அனுமதிக்கிறது.
- இது ஒரு குறைந்த பராமரிப்பு ஊடகம்; கேட்போர் கேட்க மட்டுமே அர்ப்பணிப்புடன் நேரத்தை ஒதுக்க வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் அதை வேலை செய்யும் போது அனுபவிக்க முடியும்.
- பார்வையற்றோர், முதியோர் மற்றும் தகவல்களுக்காக ஆடியோவை நம்பியிருக்கும் குறைந்த முறையான கல்வி உள்ளவர்களுக்கு வானொலி ஒரு அத்தியாவசிய துணையாக உள்ளது.

(iii) உள்ளடக்கம் மற்றும் சமூக இணைப்பு

- அகில இந்திய வானொலி மற்றும் உள்ளூர் நிலையங்கள் (சென்னை போன்றவை) உலக மற்றும் பிராந்திய செய்திகள், வானிலை அறிக்கைகள், இலக்கியம், கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு இசை (கர்நாடக, நாட்டுப்புற மற்றும் திரைப்படம்) உள்ளிட்ட பரந்த அளவிலான உள்ளடக்கத்தை வழங்குகின்றன.
- இந்த ஊடகம் விவசாயிகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான குறிப்பிட்ட நிகழ்ச்சிகளையும், கிரிக்கெட் போன்ற நிகழ்வுகளுக்கான நேரடி விளையாட்டு வர்ணனைகளையும் வழங்குகிறது.
- தொகுப்பாளர்களுக்கும் கேட்போருக்கும் இடையிலான ஆழமான பிணைப்பு, 'நேயர் விருப்பம்' போன்ற நிகழ்ச்சிகளால் எடுத்துக்காட்டுகிறது, அங்கு மக்கள் பாடல்களைக் கேட்டு கடிதங்களை அனுப்புகிறார்கள்..

(iv) நவீன சகாப்தத்தில் வானொலி

- நிலைத்தன்மை: தொலைக்காட்சி, ஸ்மார்ட்போன்கள், இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் பெருகிவிட்ட போதிலும், உலகளாவிய தகவல் பரவலில் வானொலி முன்னணியில் உள்ளது.
- தழுவல்: இந்த ஊடகம் FM ஒளிபரப்பு மற்றும் இணைய வானொலி மூலம் டிஜிட்டல் யுகத்திற்கு வெற்றிகரமாக மாறியுள்ளது, அதன் தொடர்ச்சியான பொருத்தத்தை உறுதி செய்கிறது.
- உலகளாவிய அங்கீகாரம்: 2011 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அதன் உலகளாவிய தாக்கத்தை அங்கீகரிக்க பிப்ரவரி 13 ஐ உலக வானொலி தினமாக அதிகாரப்பூர்வமாக நியமித்தது, முதல் கொண்டாட்டம் 2012-இல் நடைபெற்றது.

வானொலி மனித வாழ்க்கையின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக உள்ளது, அதன் வடிவத்தை மாற்றியமைக்கிறது, அதே நேரத்தில் ஒரு முக்கிய தகவல் தொடர்பு கருவியாக அதன் சக்தியைப் பேணுகிறது.